212—

மின்மாற்றி

***13559—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஊராட்சியில் கூடுதல் திறனுடைய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஊராட்சியில் அங்குள்ள மின்மாற்றியுடன் கூடுதலாக 1.8 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைத்து, அந்தக் குமராட்சி துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்”

என்ற வள்ளுவப் பேராசானின் வைர வரிகளுக்கு இலக்கணமாக, நீதிநெறி தவறாது நல்லாட்சி நடத்தி, இருள் சூழ்ந்த தமிழக மின் துறையை தன்னுடைய உழைப்பால், விடா முயற்சியால், தொலைநோக்குப் பார்வையால் மின்மிகை மாநிலமாக மாற்றிக்காட்டி, இன்றைக்கு நம்மிடையே இறைவியாய் விளங்குகின்ற ஒப்பற்றத் தலைவி இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களைப் பணிந்து

2017 ஜூலை 18]

வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நல்லாட்சி செய்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் அன்போடு வணங்குகின்றேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சியில் உள்ள 33/11 கிலோ வாட் துணை மின் நிலையத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு பணிகளைச் செய்வதற்கு ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துணை மின் நிலையத்தினை 110/11 கிலோ வாட் துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவதற்கும், சிறிய இடத்தில் இயங்குகின்ற பிரிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் இப்போது 11 கிலோ வாட் மின்னூட்டி மூலமாக மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது. அதனுடைய மின்பளுவே மொத்தம் 7.8 எம்.வி.ஏ. ஆகத்தான் இருக்கின்றது. எதிர்காலத்தில் தேவை அதிகமாக இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் ஸ்ரீமுஷ்ணம் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பாளையங்கோட்டை பகுதியில் பெருகி வருகின்ற மின் தேவை மற்றும் மக்கள்தொகையின் அடிப்படையில் மின் தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே*

இருக்கக்கூடிய 33/11 கிலோ வாட் துணை மின் நிலையத்தை 110/11 கிலோ வாட் துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தி, அந்தப் பகுதி மக்களுடைய தேவையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்வதற்கு முன்வருவாரா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காட்டுமன்னார்கோவில் பகுதியில் அமைந்துள்ள 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையத்திலிருந்துதான் தற்போது மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எதிர்காலத்தில் தேவையைக் கருதி, இரண்டாவதாக 16 எம்.வி.ஏ. மின்மாற்றி ஒன்று அமைத்திட கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் அளவிற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதற்கு 4—2—2017 அன்று ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. இன்னும் 3 மாத காலத்திற்குள் அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, உங்களுக்குத் தேவையான மின்சாரம் சீராக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லடம் ஒன்றியம், காளிவேலம்பட்டி கிராமத்தில் 230 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பணி நிலுவையில் உள்ளது. இந்த ஆண்டே அந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மின் தேவை அதிகம். அதேபோல் புதிய புதிய தொழிற்சாலைகள் அதிகமாக வர இருக்கின்ற காரணத்தினால் முன்னுரிமை

2017 ஜூலை 18]

கொடுக்கின்ற வகையில் திருப்பூருக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 230 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள்; இடமும் கண்டறியப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதனை ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

பாதாள சாக்கடைத் திட்டம்

***374—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் அனைத்தும், டிசம்பர் 2017–க்குள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.